RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s320

# முக்கூடற்பள்ளுவில் உளவியல் கருத்துக்கள்

கோ. மாரியம்மாள் [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638012, தமிழ்நாடு, இந்தியா.

# Psychological concepts in Mukkoodar Pallu

G. Mariammal [a, *]

[a] Department of Tamil, Vellalar College for Women (Autonomus), Erode-638012, Tamil Nadu, India

* Corresponding Author: mariammalgvcw@gmail.com

Received: 16-03-2021
Revised: 25-09-2021
Accepted: 02-10-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

Pallu literature is based on the lives of Pallar. The Saiva and Vaishnava link are found in the Mukkoodar Pallu literature. The social status of the Pallars, the farmer's mind, the inferiority of the farm's farmer, the political status of the farm, the punishment of the farmer, the resulting paddy, the resulting of the fighting of the two spouses Social psychological news, such as the problem, takes place in Mukkoodar Pallu.

**Keywords:** Mukkoodar Pallu, Pallar, political status, Farmer, spouses

## முன்னுரை

சமூகத்தின் பிரச்சனைகள் மட்டுமல்லாது சமூகத்தின் அங்கங்களான மனிதர்களின் எதார்த்த வாழ்க்கையையும் இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. மேலும் பண்ணைக்காரனின் தாழ்நிலை உணர்வு, பண்ணைக்காரனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம், பள்ளனுக்கு தண்டனை கொடுக்கும் அரசியல் நிலை, மூத்தபள்ளி, இளைய பள்ளிகளுக்கிடையே ஏற்படும் சமயப்பூசல் போன்றவற்றை முக்கூடற்பள்ளுவில் சமுதாய உளவியல் கண்ணோட்டத்தில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## உளவியலின் விளக்கம்

ஒரு மனிதன் சமூகத்தில் நடந்துகொள்ளும் செயல்பாடுகள் அறியக்கூடிய திறன் அவனுடைய நினைவாற்றல் மறதி போன்றவற்றைக் கண்டு ஆராய்வதே உளவியல். மனிதன் நடத்தைகளை அவனே நிர்ணயம் செய்கிறான். காலத்தின சூழ்நிலைக்கேற்பவும், சமுதாயத்தில் வாழும் மக்களின் பண்பாட்டின் அமைப்பிற்கேற்றவாரும் வளர்கின்றான். இப்படிப்பட்ட நிலையில் தான் ஒரு மனிதனின் உள்ளம், உடல், உணர்ச்சிகள், நடத்தைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டதே உளவியல் நடத்தைகளாகும். உளவியலாளர்கள் மனம் என்பது வேறு ஆன்மா என்பது வேறு என்கின்றனர். மனம் என்பது உள்ளம் மட்டுமே என்று விளக்குவதன் மூலம் இவ்வியலை உளவியல் என்று அழைத்தனர் (Leela Gnanalet, 2012).

ஒவ்வொரு மனிதனின் நடத்தையே அவனை இனம் காட்டுகிறது. அவனது சின்னச்சின்ன அசைவுகள் கூட ஆராயப்படுகின்றது. மனித உள்ளம், உள்ளத்தைத் தன்னகத்தே கொண்ட உடல், அவ்வுடலில் தோன்றும் உணர்வுகள், அவ்வுணர்ச்சியின் வெளிப்பாடாகத் தோன்றும் நடத்தை ஆகியவற்றை உள்ளடக்கியது உளவியல் எனக் கூறலாம்.

உளவியல் மனிதனின் செய்கைகள், புலனுணர்ச்சிகள் ஆகியவற்றை அறிய உதவும் ஓர் அறிவியலாகும். மனிதனைச் செயல்படுத்தும் உணர்ச்சிகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள், சமூகமரபுகள், பழக்கவழக்கங்கள், கட்டுப்பாடுகள் போன்றவைகளால் வெளிப்படுகின்றன. இவை பிறரால் கண்டறியப்படும் வெளிப்படை நடத்தைகளாகும்.

மனிதன் ஒட்டுமொத்த செயல்பாடுகளையும், அதற்கான காரண காரியங்களையும் கண்டு ஆராயும் ஓர் அறிவியல் துறையே உளவியல் எனக்கூறலாம். ஐம்புலன்கள் பெறும் புலனறிவு எனப்படும் உணர்ச்சிகள் மனித மனத்தில் தோன்றும் போது அம்மனிதனைச் செயல்படுத்துகின்றன

## உளவியலின் வரைவிலக்கணம்

ஒரு மனிதன் சமூகத்தில் எப்படிப்பட்டவனாக நடந்துகொள்கிறான் என்பதை அறிய அவனுடைய செயல்பாடுகளைக் கொண்டு மட்டுமல்லாமல் அவனுடைய அறிதிறன், நினைவாற்றல், மறதி போன்றவற்றை ஆராய்வதே உளவியல் வில்லியம் மக்டூகல் என்னும் உளவியல் அறிஞர். “ஒரு மனிதனின் நடத்தைகளைப்பற்றி விளக்கும் ஒரு அறிவியல்” என்று உளவியலுக்கு வரைவிலக்கணம் தருகிறார்.

## சமுதாய நிலை

“பக்கமே தூரப்போயும்
தக்க சோ றென்வே ளாண்மை
பள்ளா பள்ளா என்பார் மெய்
கொள்ளாதவர்
மைக்கடல் முத்துக்கீடாய்
மிக்கநெல் முத்துண்டாக்கும்
வடிவழகக் குடும்பன்
நானே யாண்டே”

அசுர குலத்தவர்களின் தலைவரானச் சுக்கிராச்சாரியருடைய தாயைச் சக்கரத்தாழ்வார் கொன்றதனால் உண்டாகிய பிரம்மகத்தி என்னும் பாவம் நீங்குவதற்காக திருமுக்கூடலில் எழுந்தருளியவர். அவரின் திருவடியை எடுத்து வைத்த அன்றிலிருந்து தொடங்கி வழிவழியாக வரும் பரம்பரை அடியேன் நான். உண்மையைத் தெரிந்து கொள்ளாதவர்களே பள்ளாபள்ளா என்று விலகும் சமுதாய நிலையினை அறிய முடிகின்றது. அவ்வாறு தூர விலகிப்போனாலும் அவர்களுக்கு நெருக்கமாகத்தான் இருக்கின்றேன். இங்கு பண்ணைக்காரன் ஆண்டை இல்லை. எவ்வாறென்றால் அவர்கள் அன்றாடம் உண்ணும் சோறு வடிவழகக் குடும்பன் பயிரிட்டு வளர்த்த வேளாண்மைத் தொழிலின் மூலம் வந்தது. கருங்கடலிலே தோன்றிய முத்திற்கு ஒப்பானது. அப்படிப்பட்ட முத்து போன்ற அரிசியைத்தரும் நெல்லை உண்டக்குகின்றவன் வடிவழகக்குடும்பன். அவன் ஆண்டையும் நான், அழகருக்கு அடியேனும் நான் என்ற விலகுதல், அணுகுதல் உளவியல் முறையில் அமைந்துள்ளது (Sethuragunathan, 1968).

## தாழ்நிலை உணர்வு

முக்கூடற்பள்ளு நூலில் பண்ணைக்காரனை வேடிக்கை மனிதராகவும், நகைச்சுவை மனிதராகவும் சித்தரிக்கின்றனர். பண்ணைக்காரன் பள்ளு இலக்கியங்களில் நகைச்சுவைப் பாத்திரமாகவே திகழ்கிறான். மாறுகண்ணன் பருத்தியைப்போல் கூறை வயிறன், கீரை மத்துப் போன்ற

தலையன் நீறு போன்ற வெளுத்த ஊளை ஊறும் மூக்கை உடையவன், தட்டி நெறித்த மாங்கொட்டை போல ஈ அறித்த வாயை உடையவன், தாறுமாறாய் முளைத்த மீசையை உடையவன் சண்ணைக் கிடாவைப் போன்ற நடையன், மொண்ணை முகத்தன், கீறி ஒட்ட வைத்தது போன்ற காதை உடையவன் தோற்றம் மட்டுமல்லாது ஏறுமாறாய் உளரும் இயல்பை உடையவன் என்றெல்லாம் நகைச்சுவையாகச் சித்தரிக்கின்றார். இப்பண்ணைக்காரனைப் பெருந்தலைவர்கன் நிலத்தை மேற்பார்க்கவும், தொழிலைக் கருத்துடன் நோக்கவும் ஏற்படுத்திய கூலி வேலையாளே இந்தக் கங்காணியான் பண்ணைக்காரன். கண்காணிக்கும் மேற்பார்வையாளராக இருந்தாலும் இந்நூலாசிரியர் பண்ணைக்காரனை ஒரு தாழ்நிலை உணர்வோடே படைத்துக்காட்டியிருக்கின்றார்.

உற்பத்திச் சுரண்டலை அதிகப்படுத்துவதில் அக்கறை கொண்டுள்ள ஆளும்வர்க்கம் பண்ணை அடிமைகள் இல்லாவிட்டால் உற்பத்தி நடக்க இயலாது என அறிந்தே பண்ணையாரை அடிமைகளாகக் காட்டக்கூடிய ஆசிரியரின் தாழ்நிலை மன உணர்வினை அறியமுடிகிறது.

## அரசியல் நிலை

திருமால் எழுந்தருளியிருக்கும் முக்கூடலில் ஆட்டுக்கிடை வைத்துவிட்டு இளையப்பள்ளியின் வீட்டில் உறங்கியதற்காக பண்ணைக்காரன் மரக்குட்டையை காலில் சேர்த்துக்கட்டி காவலில் வைத்தான் என்ற செய்தியை

“எந்தைதிரு முக்கூடல் ஏரியில் நீ ஆடு வைத்துத்

தந்துவித மோமருதூர்ச் சங்காத்தி வீட்டுறக்கம்

சிந்தை தொட்டுப் பாரெனக்கண சிவந்து பண்ணைக் காரணங்கே

வந்த பள்ளன் தனகாலில் மரக்குட்டை சேர்த்தானே”

இப்பாடலின் மூலம் அறிய முடிகிறது. மேலும் வேலை செய்ய தவறிய பள்ளனுக்குக் காலில் கட்டையைக் கட்டித் தொழுவத்தில் அடைத்து தண்டனை அளிக்க பண்ணைக்காரனுக்கு அதிகாரம் கொடுத்திருந்த அன்றிருந்த அரசியல் உணர்வினை அறியமுடிகின்றது. மேலும் தன்னுடைய ஒத்த வயதினை உடைய பண்ணைக்காரன் தண்டனை வழங்கும் போது மன உளைச்சல் ஏற்படும் உணர்வினையும் வெளிப்படுத்துகிறது (Jeyaraman, 2000).

## ஆண்டான் அடிமை

ஆண்டானும் அடிமையும் என்று பொதுவாகப் பேசப்பட்டாலும் பள்ளருக்கும், பண்ணையாருக்கும் ஒரே தெய்வம். பள்ளருக்குப் பெருந்தெய்வ வழிபாடு வலியுறுத்தப்படுகிறது. இறைவனும் அதற்கு முந்தைய காலத்தில் திருவிளையாடல்களைப் போல அல்லாமல் பள்ளனாகத் தோன்றி தன் பாச உணர்வை வெளிப்படுத்துவதாகப் புராணங்கள் எழுதப்பட்டன. இறைவன் மட்டுமல்லாமல் இறைவனின் குடும்பமே பள்ளர் குடும்பமாகக் காட்சியளிக்கிறது. அதுவரை இலக்கியங்களின் ஓரங்களின் பரிகாசத்திற்குரியவர்களாக காட்சியளித்த இம்மக்களுக்கு இலக்கியத்தில் ஒரு தகுதி கிடைக்கிறது. ஆனால் சமூகத்தில் தகுதி இல்லை. பள்ளனும் ஒரே சமயம், பண்ணைக்காரனும் ஒரே சமயம் என்று சமய ஒருமையின் கீழ் இருவரும் இணைக்கப்பட்டாலும் நிலவுடமையின் அசுரமுகங்கள் மறைக்கப்பட்டன. (டாக்டர் கோ. கேசவன் பள்ளு இலக்கியம் ஒரு சமூகவியல் பார்வை) ஆனாலும் வடிவழகக்குடும்பன் நாம் உழைப்பது சிவன் கோயிலுக்கே என்றும், நாம் உழைப்பது நம் சமயப் பண்ணையாருக்கே என்ற மன உணர்வினை ஏற்படுத்துகின்றது.

“எங்கே கிடக்கின்றாhன் பள்ளன் - நயினாரே

ஏறா விண்ணப்பம் மொன்றுண்டு

உங்கள் அடியானுக்கு நான் - கொடுத்துப்பார்த்தால்

உண்பானோ உண்ணானோ ஆண்டே”

இப்பாடலின் மூலம் இங்கு ஆண்டை, நயினார் என்று பண்ணைக்காரனை அழைக்கும்முறை இருந்திருக்கின்றது. பண்ணைக்காரனுக்கு அடியான் இல்லை. வடிவழகக்குடும்பன் பார்க்கும் தொழிலுக்கும், முக்கூடலில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கும் அவன் அடியவன் என்ற பாசஉணர்வினை அறிய முடிகிறது (Jeyaraman, 2000).

முக்கூடற்பள்ளுவில் வரக்கூடிய வடிவழகக்குடும்பன் தன்னுடைய கடவுளரைத் தவிர வேறு சமயக்கடவுளை வழிபடக்கூடிய மானிடரைத் துன்புறுத்துவேன் என்று பெருமையாகக் கூறிக்கொள்கிறான். ஆனால் வேற்றுச்சமயத்தை சார்ந்த (சைவ சமயம்) இளையப் பள்ளியை மணந்து அவள் மீதே மிக விருப்பமோடும் இருக்கின்றான். அப்படியானால் வடிவழகக்குடும்பனுக்குச் சைவசமயம் வேற்றுச்சமயம் இல்லை என்ற இறைவனின் மீதுள்ள பக்தி உணர்வு வடிவழகக் குடும்பனுக்கு வெளிப்படுவதை அறியமுடிகின்றது.

## தெய்வ நிலை போற்றுதலில் உளவியல் செய்திகள்

தெய்வ நிலையை போற்றும் போது வடிவழகக்குடும்பன் நெல்கணக்கு, பொலிக்கணக்கு பண்ணையாரிடம் கூறிவிட்டு நெல் அளந்த செய்தி இடம் பெறுகிறது. ஆடித்திங்களுக்கென்று ஆராயிரம் கோட்டை நெல்லை நெட்டைத்தாடிப்பிச்சன் சம்பா நெல்லை அளந்தேன். பங்குனித் திருவிழாவிற்கு ஆயிரம் கோட்டை செந்தாழை நெல் அளத்தல், சிற்றாறு அணைகட்டுவதற்கு உரிய செலவினத்தொகைக்கு ஆயிரம் கோட்டை பெருவெள்ளை நெல், மண்டகப்படிக்கு ஆயிரம் கோட்டை முத்து வெள்ளை நெல், நாவலர், அந்தணருக்கு நாலாயிரம் கோட்டை பச்சை, இட்டமலை, முண்டன் வகை நெல் இது மட்டுமல்லாமல் நாள்தோறும் பூஜைக்கு எண்ணாயிரம் கோட்டை பூம்பாளை நெல் அளந்தேன் என்று வடிவழகக்குடும்பன் பண்ணையாரிடம் கூறுகிறான். விளைந்த நெல் விளைவித்தவனுக்குரிய அளவில் கிடைக்கவில்லை. மடத்திற்கும் அணைகட்டுவதற்கும், சுவாமிக்கு தினசரி பூஜைக்கும் பயன்படுகிறது என்ற ஏக்கத்திற்கான மன உணர்வினை அறியமுடிகின்றது.

மேலும் சைவ, வைணவ சமயங்களுக்கிடையே இருக்கும் சமரசப்போக்கை வெளிப்படுத்துவற்காகவே பள்ளிகள் இருவரும் சைவ, வைணவத்தைச் சார்ந்தவர்களாகவும், ஒரே கணவனுக்கு வாழ்க்கைப்பட்டவர்களாகவும் இவ்விலக்கித்தைப் படைத்துக் காட்டியுள்ளார். மூத்த பள்ளி, இளைய பள்ளியினிடையே ஏற்படும் மனச்சிக்கல், குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படுதல், இரு மனைவியருக்கிடையே பள்ளன்படும் துன்பநிலை, ஆணும், பெண்ணும் அலுப்பில்லாமல் உழவு வேலை செய்யும்போது இனக்கவர்ச்சியால் ஏற்படும் சிக்கல் போன்ற செய்திகள் முக்கூடற்பள்ளு நூலில் இடம் பெறுகின்றன.

பள்ளு இலக்கியங்களிடையே பள்ளியர் ஒருவரையொருவர் ஏசிக்கொள்ளும் ஏசல் பகுதி சுவை மிகுந்த பகுதியாகும். சக்களத்தி சண்டையாகத் தொடங்கி சமயப்பூசலாக மாறுகிறது. இச்சமயப்பூசலின் மூலம் பள்ளியர்கள் இருவரும் இறைவனைத் தூற்றுவது போல் போற்றக்கூடிய மன உணர்வினை

“பெருமான் அடியானுக்குப் பெண்டிருந்துமே - எங்கள்

பெருமாளை நீ பழித்துப் பேசலா மோடி?

திருமால் அடிமையென்றாய் சாலப் பசித்தால் - ஆருந்

தின்னாததுண்டோ சினந்தால் சொல்லாத துண்டோ?”

இப்பாடல் பள்ளியர் இருவரும் ஒத்துப்போகும் நிகழ்வை எடுத்துரைக்கின்றது. இப்பள்ளுவில் ஏசல் என்ற சொல்லுவதைவிட பரமன் பெருமை பேசல் என்றே சொல்லலாம். குயில் கூவுதல், ஆற்றில் வெள்ளம் வருகை போன்ற இயற்கை வர்ணனைப் பகுதிகளிலும் சமயப் பெருமை பேசப்படுகிறது. இது இறைவனின் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தும் உளவியலாக அமைந்துள்ளது (Kesavan, 1991).

## பள்ளு இனமக்களின் சமூகநிலை

இவ்விலக்கியம் 16-17-ம் நூற்றாண்டு நாயக்க மன்னர்கள் காலத்தில் இயற்றப்பட்டது என்பதால் நேரடியாக நாயக்கமன்னர்களை விமர்சிப்பது இல்லை. பண்ணையாரை உயர்த்தி பள்ளரின மக்கள் பாடுவதாகவே அமைந்துள்ளது. நூலின் இறுதிப்பகுதியில் பள்ளி பண்ணையாரைத் திட்டுவதாக உள்ளது. ஆயினும் அக்கால பள்ளர்கள் பண்ணையாரை நயினார் என்று அழைக்கும் முறை இவ்விலக்கியத்தில் அமைந்துள்ளது. சங்க காலத்தில் அறிவுச் சமூகத்தவராக வாழ்ந்த இவர்கள் நாயக்கர் ஆட்சியில் இறங்கு முகமாகவே இலக்கியங்களில் படைக்கப்பட்டுள்ளனர்.

தொட்டியர் இனமக்கள் பசுக்கள் மீது தீராத பற்றுக்கொண்டவர்கள் தங்கள் குலதெய்வ பெருமாள் கோயில்களில் கோயில் மாடு வைத்து அதை தெய்வமாக வணங்கி வருபவர்கள்.

"தொட்டியர் காளை மட்டிபோல் வெந்துநான்

சோறிட்டாலுங்கண் - ஏறிட்டும் பாரான்"

இங்கு தொட்டியில் காளை மண்டுவது போல் நன்றாகத் தின்பவன் என்றும், ஊர் ஊராகச்செல்லும் தொட்டியருடைய காளையைப் போன்று சீறி விழித்துக் கொண்டு நான் சோறு வைத்தாலும் ஏறிட்டும் பார்க்காதவன். சோறிடும் வட்டிலால் தலையில் அடிக்க ஓங்குகின்ற இளையபள்ளியைச் சிறப்புடையவளாக எண்ணுகின்றான். மூத்தபள்ளிக்குப் பள்ளன் மீதுள்ள காதல் உணர்வும், ஒரு வித கோப உணர்வும் மேம்படுவதைக் காணமுடிகின்றது (Kesavan, 1991).

## முடிவுரை

முக்கூடற்பள்ளு இலக்கியத்தில் அதிகாரவர்க்கத்தினரின் அடக்குமுறைகள், பள்ளன், மூத்தபள்ளி, இளைய பள்ளியரிடையே ஏற்பட்ட சமயப்பூசல்கள், சமய ஒற்றுமை, பள்ளியர்கள் இருவரும் கடவுளைத் தூற்றினாலும் போற்று முறை என்று பள்ளு காட்டும்

## References

Jeyaraman, N.V., (2000) Pallu Ilakkiyam, Manivasagar Pathippagam, Chennai, India.

Kesavan, K., (1991) Pallu Ilakkiyam, Annam Veeliyeedu, Sivagangai, India.

Leela Gnanalet, S., (2012) Podhu Ulaviyal, Saradha Pathippagam Chennai, India.

Sethuragunathan, (1968) Mukkoodarpallu, Kazhaga Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License